**செய்தி வெளியீடு எண்: 253** **நாள்: 12.04.2019**

இந்திய தேர்தல் ஆணைய கடித எண் 3/ER/2018/SDR/Vol-I, நாள் **15.03.2019**ல் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படி **1951** ஆம் ஆண்டு மக்கள் பிரதிநித்துவச் சட்டத்தின் **126** ஆம் பிரிவு ஏனையவற்றுடன், பொதுகூட்டங்கள், பேரணிகள் வாயிலாக தேர்தல் பிரச்சார செயல்பாடுகள் மற்றும் தொலைக்காட்சி மற்றும் அது போன்ற சாதனங்கள் வாயிலாக தேர்தல் தொடர்பான பொருண்மைகளைக் காட்சிப்படுத்துவதை வாக்குப்பதிவுக்கு 48 மணி நேரத்திற்கு முன்னதாக வாக்காளர்களுக்கு மன அமைதி ஏற்படுத்தும் நோக்கத்துடன் தடைசெய்கிறது.

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின்படி, கீழ்கண்ட அறிவுறுத்தல்களை தேர்தல் ஆணையம் வழங்கி உள்ளது. வாக்குப்பதிவு நிறைவுறுவதற்கு 48 மணி நேரத்திற்கு முன்னர் பொதுக் கூட்டங்கள் டபெறுவதைத்நை தடை செய்தல்.

1) யாதொரு நபரும்,

a. தேர்தல் தொடர்பான, யாதொரு பொதுக்கூட்டம் அல்லது பேரணியை ஒருங்கிணைக்கவோ, நடத்தவோ அல்லது பங்குபெறவோ, கலந்துகொள்ளவோ அல்லது உரையாற்றவோ கூடாது; அல்லது

b. திரைப்படங்கள், சிதொலைக்காட் அல்லது அத்தகைய ஊடகங்கள் வாயிலாக யாதொரு தேர்தல் பொருண்மை குறித்து பொது மக்களிடம் காட்சிப்படுத்துதல் கூடாது; அல்லது

c. யாதொரு தேர்தலிலும்,வாக்குப்பதிவு நடைபெறும் பகுதியில் , வாக்குப்பதிவு நிறைவடைவதற்கு 48 மணி நேரத்திற்கு முன்னர், பொதுமக்களை கிகுக்ர்ழு வகையில், தேர்தல் பொருண்மைகளை பிரச்சாரம் செய்யும் வகையில், யாதொரு இசை நிகழ்ச்சி அல்லது யாதொரு திரையரங்க நிகழ்ச்சிகள் அல்லது ஏனைய யாதொரு கேளிக்கை அல்லது பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை நடத்துவதோ அல்லது ஏற்பாடு செய்வதோ கூடாது.

2) துணைப் பிரிவு (1) –இன் வரம்பு நிபந்தனைகளை மீறும் யாதொரு நபருக்கும் இரண்டு ஆண்டு சிறை தண்டனை அல்லது அபராதம் அல்லது இவை இரண்டும் சேர்த்து தண்டனையாக வழங்கப்படும்.

3) இந்தப் பிரிவில், ”தேர்தல் பொருண்மை” என்பது தேர்தல் முடிவில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய யாதொரு விவகாரங்களை திட்டமிடுதல் அல்லது தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு முன்கூட்டியே திட்டமிடுதல் அல்லது பாதிப்படையச் செய்வது என்ற பொருள்படும்.

மாநிலத்தில்/மாவட்ட அளவில், மாவட்ட சான்றளிப்பு கண்காணிப்பு குழுவிடமிருந்து அரசியல் விளம்பரங்களின் பொருளடக்கம் குறித்து முன் சான்றளிப்பு பெற்றிருந்தாலன்றி, மற்றபடி, யாதொரு அரசியல் கட்சி அல்லது வேட்பாளர் அல்லது ஏனைய யாதொரு அமைப்பு அல்லது நபர், தேர்தல்களின் அனைத்து கட்டங்களிலும், வாக்குப்பதிவு நடைபெறும் நாளன்றும் வாக்குப்பதிவு நடைபெறும் நாளுக்கு ஒரு நாள் முன்னரும், யாதொரு விளம்பரத்தை அச்சு ஊடகத்தில் வெளியிடக்கூடாது. தேர்தல் கட்டத்தில் வாக்குப்பதிவு நடைபெறக்கூடிய மாநிலத்தில், மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதிகளில் சுற்றோட்டத்திற்காக அச்சு ஊடகத்தில் வெளியிடப்பட வேண்டிய அரசியல் விளம்பரங்களுக்கும் இது பொருந்தும்.

| தேர்தல் கட்டம் மற்றும் வாக்குப்பதிவு நாள் | வரையறுக்கப்பட்ட நாட்கள்<br>(வாக்குப்பதிவு நடைபெறும் நாள் மற்றும் வாக்குப்பதிவுக்கு முந்தைய நாள்) |
|---|---|
| இரண்டாவது கட்டம் – 18.4.2019 | 17.4.2019 மற்றும் 18.4.2019 |

பரப்புரை ஓய்ந்த காலத்தின் போது, நட்சத்திர பேச்சாளர்கள் மற்றும் ஏனைய அரசியல் தலைவர்கள், செய்தியாளர்கள் சந்திப்பு மற்றும் ஊடகங்களுக்கு பேட்டியளித்தல் போன்றவற்றில் கலந்துகொண்டு தேர்தல் தொடர்பான பொருண்மைகள் குறித்து கருத்து தெரிவப்பதைத் தவிர்க்க வேண்டும்.

மேலும், தொலைக்காட்சி அலைவரிசைகளில் / கேபிள் வலையமைப்புகளில் / சமூக ஊடகங்களில் மற்றும் வானொலியில் யாதொரு விளம்பர சான்றளிப்பதற்கான அவர்களது விண்ணப்பங்களை சான்றளிப்புக்காக தமிழ்நாட்டில் தலைமையிடத்தை கொண்டுள்ள பதிவு பெற்ற அனைத்து அரசியல் கட்சிகள், ஒளிபரப்பு செய்யப்படும் நாளுக்கு மூன்று நாட்கள் முன்னதாக அளிக்கப்பட வேண்டும். ஏனைய யாதொரு நபர் அல்லது பதிவுபெறாத அரசியல் கட்சிகள், அவர்களின் விண்ணப்பங்களை ஒளிபரப்பு செய்யப்படும் நாளுக்கு ஏழு நாட்களுக்கு முன்னதாக அளிக்க வேண்டும்.

**எனவே, அரசியல் விளம்பரம் 16.04.2019 அன்று வரையில் ஒளிபரப்பப்படும் என்பதால் தேர்தல் பரப்புரை காலம் முடிவடைவதற்கு முன்னரே (அதாவது 13.4.2019 அன்று 5 மணிக்கு முன்னர்) அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களிடம், ஊடகச் சான்றளிப்பிற்கான கோரிக்கை அளிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.**

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9